1972 ஆகஸ்ட் 18]

மூர் அங்காடிக்கு எதிரில் சுரங்கப்பாதை.

திரு எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், மூர் அங்காடிக்கு எதிரில் நடந்து செல்வோருக்கெனச் சுரங்கப்பாதை ஒன்று அமைக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ)&(இ) பூந்தமல்லி தேசிய நெடுஞ்சாலையில் பூங்கா ரெயில் நிலையத்திற்கு அருகே ஒரு சுரங்கப்பாதை ரூ. 11.50 லட்சம் அளவில் அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, இதே இடத்தில் ஒரு 'ஃப்ளை ஓவர்' கட்டுவதற்கான திட்டம்பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, முதலில் 'பெடஸ்ட்ரியன் ஃப்ளை ஓவர்' கட்ட வேண்டும் என்ற குறிப்பைத்தான் கொடுத்தார்கள். பின்னர் அது அதிக அளவிற்குப் பயன்படாது என்ற காரணத்தினால், அது தேவையில்லை என்று கருதி கைவிடப்பட்டுவிட்டது.

Nirar Tunnel.

* 62 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether heavy landslips have occurred in June, 1971 at the entry face of the Nirar Tunnel;

(*b*) if so, the expenditure incurred in this regard; and

(*c*) the details of delay caused to the completion of the work?

நீராறு சுரங்கப் பாதை.

திரு. கே. ராஜாராம் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நீராறு சுரங்கப் பாதையின் நுழைவாயில் பெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டனவா ?

(இ) ஆமெனில், சுரங்க வாயிலை சீர்ப்படுத்துவதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

(உ) இப்பணியை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ரூ. 5 லட்சம்.

(உ) நிலச்சரிவு காரணமாக குடவரையின் நுழைவாயிலிலிருந்து சுரங்கப்பாதை அமைக்கும் பணியேதும் செய்ய இயலவில்லை. இதன் விளைவாக 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் அளவில் முடிக்கத் திட்டமிட்ட பணி 1973-ஆம் ஆண்டு டிசம்பர் அளவில் தான் முடிக்கப்படலாம்.

World Bank.

* 63. *Q.*—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the World Bank Team which visited Tamil Nadu during September gave any suggestions and advice and laid any conditions for the administration and distribution of the loans given by them and the modus operandi of the plan;

(*b*) the details thereof;

(*c*) whether any modification has been made in the modus operandi here so as to implement their suggestions; and

(*d*) if so, the details thereof ?